**தலைப்பு 206 - பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 206 - பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 26 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 797.10 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 752.51 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 44.59 மில்லியன் அதாவது 5.59 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 500.36 | 495.53 | 4.83 | 0.97 |
| மூலதனம் | 296.74 | 256.98 | 39.76 | 13.40 |
| மொத்தம் | 797.10 | 752.51 | 44.59 | **5.59** |

**2.2 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 21.25 | 16.67 | 11.65 | 12.44 | 60.00 | 47.34 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 29.52 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0054/000 | 0.08 |
| 6000/0000/00/0013/0026/000 | 0.50 |
| 6000/0000/00/0016/0005/000 | 28.91 |
| 6000/0000/00/0018/0006/000 | 0.03 |
| மொத்தம் | **29.52** |

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஈ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

திணைக்களத்தின் குழாம் வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மாதாந்த பொழிப்பு அறிக்கை மற்றும் தேவையான ஏனைய சான்றுகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 1,372,123 கூட்டுத்தொகையான எரிபொருள் செலவினத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியாதிருந்தது.

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டினபோது சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 8,969,303 ஆக இருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6000/0000/00/0016/0005/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,270,072 தொகையான 2 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

20601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 237,860 ஆக இருந்தது. அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ஆண்டின் இறுதி வரவு மீதிக்கும் திறைசேரி கணனி அச்சிடலின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் வரவு மீதிக்கும் இடையே ரூபா 444,761 தொகையான வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற இவ்வேறுபாட்டை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனிப்பட்ட கடன் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைகளும் திணைக்களத்தின் கடன் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 92,810 வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. அந்த வேறுபாட்டில் ரூபா 81,405 தொடர்பாக காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்ட பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | சாகித்திய விஷேட அனுசரணைப் புத்தங்கள் | 206 | 117,667 | 03 வருடங்கள் |
| (ii) | சங்கீதப் பொருட்கள் | 01 | 85,833 | 07 வருடங்கள் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் தலைமை அலுவலகத்தின் அறிக்கை

மாத்திரம் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சிங்கள அகராதி அலுவலகம், கதைக் களஞ்சிய அலுவலகம் கலாபவணம், வலிசிங்ஹ ஹரிச்சந்திர நூதனசாலை, சுதந்திர மந்திரய, எதிரிவீர சரத்சந்திர நாடகப் பயிற்சி ஆராய்சி நிறுவகம், ஜயந்தி புத்தகசாலை மற்றும் கட்டுவாவல புத்தகக் களஞ்சியம் போன்ற பிரிவுகளில் 2016 மே 02 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய கலா பவணத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 வருடத்திற்கு குறைவான காலமாக இருந்துவரும் ரூபா 22,404,771 தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் காணப்பட்டன.

(ii) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 16 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 6,985,224 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.9 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 104(1), 104(2) | 73,000 | 2001 ஆம் ஆண்டின் போது கலாபவணத்திற்கு விநியோகிக்கப்பட்டு அதே ஆண்டில் காணாமல் போயிருந்த GT - 10 கீட்டார் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 1980 ஏப்ரல் 01 ஆந் திகதிய 162 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | 171,666 | அரசின் நடனக் குழுவின் பயிற்சி ஆலோசனையாளராக வருகை, வெளிச்செல்லுதல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிப்பொறுப்புக்கள் என்பவற்றை உறுதிப்படுத்தாமல் 7 மாதங்களுக்காக மதியுரைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |

**3.10 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கலையகங்களின் திறனாளிகள் குழாமை நிறுவுதல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம், மாவட்ட மற்றும் பிரதேச தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் 54 திறனாளிகளுடன் கூடிய நடனமாடும் குழாமைக் கட்டியெழுப்புதல் அதன் பிரதான நோக்கமாக இருந்தது. அவ்வாறே மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட திறனாலிகளில் தெரிவு செய்யப்பட்ட 100 பேருடன் கூடிய தேசிய நடனக் குழாமைக் கட்டியெழுப்புதலும் இலக்கிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும், இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும், தேசிய கலாபவணத்திற்கு நியமிக்கப்பட்ட 54 பேர் மற்றும் கண்டி தேசிய கேந்திரத்துடன் தொடர்புடைய 45 திறனாலிகளைக் கொண்ட குழாம் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் மாவட்ட மட்டத்தில் 1000 திறனாலிகளை உள்ளடக்கிய நடனக் குழாம் 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது

வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயல் நடைமுறை விதியின் III ஆவது அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவிற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பயிற்சி ஆலோசனையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட நபரொருவருக்கு 2014 திசெம்பர் மாதம் முதல் 2015 யூன் மாதம் வரையிலான காலத்தில் ரூபா 171,666 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட நடைமுறை விதியின் 1 ஆம் தொகுதியின் 02 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் நியமனம் செய்வதற்காக முறையான நியமனக் கடிதமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்களில் அதிகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வெளித்தரப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்டு 2014 திசெம்பர் 26 ஆந் திகதி முதல் 30 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு 04 பாடகர்கள் வீதம் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தனர். முறையான அங்கீகாரமின்றி ஒரு பாடகருக்கு ஒரு நிகழ்ச்சிக்காக ரூபா 10,000 வீதம் ரூபா 200,000 உம், உபசரிப்புச் செலவினத்திற்காக ரூபா 43,870 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 243,870 திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 1.1 மற்றும் 1.2 ஆம் பிரிவுகள் பிரகாரம் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாது

திணைக்களத்தில் நிரந்தர பதவியணியினருக்குரிய ஐந்து உத்தியோகத்தர்கள் நடனக் கலைஞர் குழாமின் ஆலோசனையாளர்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 216,000 தொகையும், 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 351,000 தொகையும், 2015 ஆம் ஆண்டின் போது 99,000 தொகையும் ஆக மதியுரை படிகள் அந்த ஐந்து உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**3.13 நிதிசார் முறைகேடுகள் வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மஹாவங்ச அலுவலகத்தின் வளவாளர் சபை அங்கத்தவர்களுக்கான படிகள் மற்றும் உபசரணை நடவடிக்கைகளுக்கு பெறப்பட்ட ரூபா 70,000 தொகையான முற்பணம் திணைக்களத்தின் பணிப்பாளரின் தனிப்பட்ட கணக்கில் செலவு வைப்பதற்கு மஹாவங்ச அலுவலகத்தின் இணைப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மஹாவங்ஸ அலுவலகத்தின் அங்கத்தவர்களுக்கு படி செலுத்துதல் திணைக்களத்தின் சிறாப்பரினால் அல்லது அவரின் பெயரில் எழுதப்பட்ட காசோலை மூலம் செய்யப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும், அந்த படிகள் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் மஹாவங்ஸ அலுவலகத்தின் இணைப்பாளருக்கு செயல்நிமித்த உப கட்டுநிதி மூலம் செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தரினால் அந்த முற்பணத்தை தீர்க்கும் போது ரூபா 32,000 தொகைக்காக போலியான பற்றுச்சீட்டின் மூலமும், ரூபா 28,000 கூட்டங்களுக்கு சமூகமளித்த அங்கத்தவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு போலியான கையொப்பம் இட்டு பெயர்ப்பட்டியல் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.

**3.14 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 14 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 524 | 481 | 43 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 87 | 74 | 13 | - |
| (v) | ஏனைய (ஒப்பந்த அடிப்படை) | 82 | 43 | 49 | 10 |
| | மொத்தம் | 722 | 614 | 118 | 10 |